[1987 ஏப்ரல் 21]

மின்.சி.சி. ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுகிற நேரத்தில்கூட, அதே பள்ளியிலே பணியாற்றுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நல்ல ஆலோசனை. அதைக் கருத்தில் கொண்டு அரசு அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும்.

திண்டிவனம்-கிடங்கல் ஏரியை மராமத்து செய்தல்.

*435—(*வினா எண் 6662)* **திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ): திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் அவசியம் ஏற்படும்போது அவ்வப்போது உள்ள நிதி நிலைக்குத் தக்கவாறு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் வறட்சிப் பணியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழக ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வஃப் மூலம் பண உதவி.

*436—(*வினா எண் 9099)* **டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வக்ஃப் Wakf மூலம் பணம் உதவி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) எந்தக் காரியங்களுக்காகவும், நோக்கங்களுக்காகவும், வக்ஃபின் பணம் செலவிடப்பட வேண்டும் என்று "வக்ஃப் நாமா'வில் எழுதப்பட்டுள்ளதோ அவற்றிற்கு மட்டும் வஃபின் பணம் செல விடப்படும். ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்யப் பணம் செலவிடப்பட வேண்டுமென்று 'வக்ஃப் நாமா'-வில் வழி வகை செய்யப்பட்டிருந்தால் அதற்காகவும் பணம் செலவிடப் படும்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வக்ஃப் போர்டிலிருந்து பணம் ஒதுக்கப் பட்டதில், ஏழை முஸ்லீம்களுக்குத் திருமணம் செய்வதற்காக எவ்வளவு என்று வரையறுக்கப்பட்டுள்ளதா? அந்த வக்ஃப் போர்டின் மூலம் கலந்து, அது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் போர்டிலே இல்லை. தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல வக்ஃப்களிலும் அப்படி இல்லை. எனக்கு வந்த புள்ளிவிவரத்தின்படி ஒரே ஒரு வக்ஃப்பில் மட்டும்தான் திருமணத்திற்குப் பணம் கொடுப்பதாக உள்ளது. எவ்வளவு கொடுப்பது என்று அவர்களாகவே முடிவு செய்துகொள்ளலாம்.

மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்.

437—(*வினா எண் 9167) திரு. வே. கு. சின்னசாமி மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து கோளாவிற்குள் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு புன்னம்புழா போன்ற ஆறுகளை மத்திய அரசின் உதவியுடன் தமிழகத்திற்குள் கிழக்கு நோக்கித் திருப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?